சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலகு – திரு.சு.ரூபின். த/பெ, காலஞ்சென்ற திரு. சுரேந்திரன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,

பணிகள் அலகு, பணி–9(2) பிரிவு

அரசாணை (3டி) எண்.148 நாள் 22.08.2023.

சோபகிருது வருடம், ஆவணி–5,

திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது:

கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆ.கு.3/43912/2020, நாள் 05.07.2022.

******

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலகில், காவல் துறையில் பணியாற்றி பணியிடையே 25.06.2006 அன்று காலஞ்சென்ற திரு.சுரேந்திரன் என்பவரின் மனைவி திருமதி அம்பிகா என்பவர் தனது மகன் திரு சு.ரூபின் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 19.07.2006 அன்று மனு அளித்துள்ளதாகவும், இம்மனு மூன்றாண்டு காலக்கெடுவிற்குள் பெறப்பட்டுள்ளது என்றும், மனு அளிக்கப்பட்ட தேதியில் தனியர் 15 வயதினைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், தனியர் அரசுப் பணியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட 24.07.2019 தேதியில் 28 வயதினை பூர்த்தி செய்துள்ளார் என்றும், விண்ணப்பம் அளிக்கப்பட்ட நாளில் தனியர் உரிய கல்வித் தகுதியான 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் (மார்ச் 2006) என்றும், தனியர் 10–ஆம் வகுப்பு கல்வியை மலையாளத்தை முதல் பாடமாகக் கொண்டு கேரள மாநிலத்தில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியர் கேரள மாநில பாடத்திட்டத்தின் கீழ் பயின்று பெற்ற 10–ஆம் வகுப்பு கல்விச் சான்று தமிழ்நாட்டில் வழங்கும் மதிப்பெண் சான்றுக்கு இணையானது என இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம் அவர்கள் சான்றளித்துள்ளார் என்றும், தனியர் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும்; தனியருக்கு

//த.பி.பா//

கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளிக்கப்பட்ட 19.07.2006 தேதியில் தனியர் 15 வயதுடையவராக இருந்துள்ளதால், அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1) துறை, நாள் 23.01.2020-ல் கருணை அடிப்படையில் பணிநியமனத்திற்காக விண்ணப்பம் அளிக்கும் நேரத்தில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச வயது 18 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் பிரிவு 20(6)(b)-ஐ தளர்வு செய்து, தனியர் திரு.சு.ரூபின் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசாணை பெற்றுத் தருமாறு கோரியுள்ள கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை ஏற்று, தனியர் திரு.சு.ரூபின் என்பவர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன், பிரிவு 20(6)(b)-ஐ வயது விதித் தளர்வு செய்து தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில், தனியர் பணியேற்ற நாளான 24.07.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினைப் பெற்றுத் தருமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசளவில் நன்கு ஆய்வு செய்யப்பட்டது, அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டம், காவல் துறையில் தலைமைக் காவலராகப் பணியாற்றி பணியிடையே 25.06.2006 அன்று காலஞ்சென்ற திரு சுரேந்திரன் என்பவரின் மகன் திரு.சு.ரூபின் என்பவர் விண்ணப்பம் அளித்த நாளில் குறும வயது தகுதியான 18 வயதினைப் பூர்த்தி செய்யாததால், தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58-ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன், பிரிவு 20(6)(b) மற்றும் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் பெற பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்வு செய்து தனியர் திரு.சு.ரூபின் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்று பணியேற்ற நாளான 24.07.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண். 4241/க்யூ-2/2023-1, நாள் 15.06.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண். 4983669/ஜி-2/2023, நாள் 25.07.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**குமார் ஜயந்த்,**

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 5.

//த.பி.பா//

மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி.
திரு.சு.ரூபின், இளநிலை உதவியாளர்,
(கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மூலமாக)

**நகல்**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை–9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

22/8/2023

**பிரிவு அலுவலர்.**

22-8-23